## அமைச்சர் மா.சுப்பிரமணியன் எழுதிய

# 'கின்னஸ் கலைஞர்' புத்தகங்கள் - அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டார்!

## குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் - செஸ் சாம்பியன் குகேஷ் பெற்றுக்கொண்டனர்!

சென்னை, ஜன.05-

அமைச்சர் மா.சுப்பிரமணியன் எழுதிய கின்னஸ் கலைஞர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) புத்தகங்களை அமைச்சர் துரைமுருகன் வெளியிட தமிழ் பிரதியை குன்றக்குடி அடிகளார் மற்றும் ஆங்கிலப் பிரதியை உலக சதுரங்க சாம்பியன் குகேஷ் பெற்றுக்கொண்டனர். அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்புரையாற்றினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் எழுதிய "கின்னஸ் கலைஞர்" - (தமிழ்) மற்றும் கின்னஸ் கலைஞர் (ஆங்கிலம்) ஆகிய இரு நூல்கள் நேற்று (4-1-2025) சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் நடைபெற்ற புத்தக காட்சி அரங்கில் வெளியிடப்பட்டது. இதன் தமிழ் பிரதியை தலைமையேற்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட முதல் பிரதியை மேனாள் காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் சைலேந்திரபாபு பெற்றுக்கொண்டார். ஆங்கில நூலின் முதல் பிரதியை உலக சதுரங்க சாம்பியன் குகேஷ் பெற்றுக்கொண்டார்.

திருவண்ணாமலை ஆதீன குருமகா சன்னிதானம் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் மற்றும் இந்து நாளேட்டின் மேனாள் ஆசிரியர் என். ராம் ஆகியோர் வாழ்த்துரை நல்கிட, நூலாசிரியர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நன்றி கூறி ஏற்புரையாற்றினார்.

முன்னதாக எமரால்டு பதிப்பக உரிமையாளர் முனைவர் கோ.ஒளிவண்ணன் வரவேற்புரையாற்றினார். திருமகள் நிலைய உரிமையாளர் டாக்டர் பழனியப்பன் முன்னிலையேற்று உரையாற்றினார். கவிஞர் இளையகம்பன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இதுவரை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒன்பது நூல்களை எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் "சூரியன் பெற்ற சுழல் பூமி" எனும் இவரது முதல் நூலானது. முதல்வர் தளபதி அவர்களின் 60ஆம் அகவையை முன்னிட்டு 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாடு தழுவிய கவிதைப் போட்டி நடத்தி, ஆயிரக்கணக்கான கவிதைகளுள், சிறப்பான 60 கவிதைகளைத் தேர்வு செய்து இந்நூல் உருவானது.

அதைப் போலவே "வரலாறாய் வாழ்பவர்" நூலும் மிகுந்த சிறப்புக்குரியது. "முத்தமிழ் அறிஞர்" கலைஞரின் (90 ஆம் அகவையை முன்னிட்டு உலகமெல்லாம் உள்ள தமிழர்கள் தமிழறிஞர்கள் மத்தியில் கவிதைப் போட்டி ஒன்றை நடத்தி, தமிழின் சிறந்த கவிஞர்கள் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளைத் தொகுத்து, நம் மாண்புமிகு முதல்வர் தளபதி அவர்களின் முன்னுரையுடன் 2014ஆம் ஆண்டு அந்த நூலை மா.சுப்பிரமணியன் நமக்கு வழங்கினார்.

அதைத்தொடர்ந்து மா.சுப்பிரமணியன் 2017-இல் படைத்த மகத்தான ஒரு படைப்புதான் "மேயர் பதவியல்ல பொறுப்பு!" எனும் நூல். சென்னைப் பெருநகரத்தின் மேயராகப் பொறுப்பேற்று, அக்காலக் கட்டங்களில் நடைபெற்ற சென்னைக்கான பணிகளின் சிறப்பை எடுத்து விளக்கும் நூலாய் இது வெளியிடப்பட்டது. முதல்வர் தளபதி அவர்களின் வாழ்த்துரையுடன் உருவான இந்நூல், எமரால்டு பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்து இன்றுவரை பல லட்சம் பிரதிகள் விற்கப்பட்ட நூலாக இது விளங்கிறது. சென்னைப் புத்தகக் காட்சியில் வெளியிடப்பட்ட இந்நூலின் முதல் பிரதியை திரைப்பட இயக்குனர் பா.ரஞ்சித் வெளியிட முதல் பிரதியை பேராசிரியர் சுப. வீரபாண்டியன் பெற்றுக்கொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

மா.சுப்பிரமணியன் அவர்களின் மற்றொரு நூல் "ஓடலாம் வாங்க" எனும் உன்னதமான நூல். 2021 ஒய்.எம்.சி.ஏ., புத்தகக் காட்சியில் இன்றைய தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்ட இந்நூலின் முதல் பிரதியை, இந்திய ஹாக்கி அணியின் மேனாள் தலைவர் பாஸ்கரன் பெற்றுக்கொண்டார்.

உலகமெலாம் நடத்தப்பட்ட 125 மாரத்தான் ஓட்டங்களில் பங்கேற்று, அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்ற அனுபவங்களும் முன்னெடுப்புகளும் இந்நூலில் விரிவாக வழங்கப்பட்டிருக்கிறது. இளம் தலைமுறைக்கும் எதிர்கால தலைமுறைக்கும் உடலை மனதை வலிமையோடு வைத்துக்கொள்வதற்கான ஒரு பாடநூலாக இந்நூல் திகழ்கிறது. இந்நூலையும் எமரால்டு பதிப்பகத்தின் நிறுவனர் கோ.ஒளிவண்ணன் அவர்களே பதிப்பித்து சிறப்பு செய்தார்.

"ஓடலாம் வாங்க" நூலின் ஆங்கிலப் பதிப்பாக *Come lets Run* எனும் படைப்பு, 2023ஆம் ஆண்டு இதே YMCA புத்தகக்காட்சியில் வெளியிடப்பட்டது.

நூலின் முதல் பிரதியை இந்திய கிரிக்கெட் அணியின் மேனாள் கேப்டன் ஸ்ரீகாந்த் அவர்கள் வெளியிட மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் இயக்குனர் சிசில் சுந்தர் முதல்படியைப் பெற்றுச் சிறப்பித்தார். அறிஞர்களும் சமூகச் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை நல்கிய இந்நூலையும் எமரால்டு பதிப்பகமே பதிப்பித்தது.

கொரோனா உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் 2021-ல் ஆட்சிப் பொறுப்பேற்ற முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலான கழக அரசின் ஓயாத கொரோனா ஒழிப்புப் பணிகளையும் மருத்துவ முன்னெடுப்புகளையும் கொரோனாவிலிருந்து நாட்டு மக்களைக் காத்த அரும்பணிகளையும் விளக்கும் சிறப்பான நூலாய், 2024ஆம் ஆண்டு முதல்வர் தளபதி அவர்களின் முன்னுரையோடு "கொரோனா உடல் காத்தோம் உயிர் காத்தோம்" எனும் நூலினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியான இந்நூல் அமைந்தது.

ஒய்.எம்.சிஏ., புத்தகக் காட்சி அரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில், தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட, தமிழ்ப் படியை இந்துக் குழுமத்தின் தலைவர் என். ராம் பெற்றுக்கொண்டார். ஆங்கிலப் படியை மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அவர்கள் பெற்றுக்கொண்டார். நூலின் தமிழ் ஆக்கத்தை திருமகள் நிலையமும், ஆங்கில வடிவத்தை எமரால்டு பதிப்பகமும் வெளியிட்டு மகிழ்ந்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், தமிழச்சி தங்கபாண்டியன் மற்றும் நக்கீரன் கோபால் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

அந்தப் பெரும் படைப்பின் வியப்பில் இருந்து நாம் மீள்வதற்குள்... இதோ "கின்னஸ் கலைஞர்" எனும் கம்பீரமான நூலை நமக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கியுள்ளார். நேற்று (4.1.2025) ஒய்.எம்.சி.ஏ., புத்தகக்காட்சி அரங்கில் வெளியிடப்பட்ட இந்நூல்... முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பெயரில் "கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தானின் சாதனை விளக்க நூலாக வெளியிடப்பட்டது.

இந்த நான்கு மாரத்தான் ஓட்ட நிகழ்வுகளிலிருந்து சேவை வரி நீங்கலாகப் பெறப்பட்ட ரூபாய் 5 கோடியே 43 லட்சத்து 96 ஆயிரத்து 869 ரூபாயினை மருத்துவ சேவைப் பணிகளுக்காக, எப்படி முத்தமிழறிஞர் கலைஞர் தாம் வாழ்ந்த இல்லத்தை மருத்துவமனைக்கு வழங்கச் சொல்லியிருக்கிறோ, அதேபோல அவரது நினைவால் நடத்தப்பட்ட மாரத்தான்களின் ஒட்டுமொத்த நிதியையும் மருத்துவ செயல்பாட்டிற்கே வழங்கியிருக்கிறார் அமைச்சர் மா.சுப்பிரமணியன்.

இம்மாரத்தான்களில் உலக அரங்கில் நிகழப்பெற்ற கலைஞர் நினைவுப் பன்னாட்டு மாரத்தான்களின் வரலாற்றுச் சிறப்புகளை வியக்க வியக்கச் சொல்லி நம்மை திகைப்பில் ஆழ்த்தியிருக்கிறார். மெய்நிகர் மாரத்தான்கள் இரண்டு, ஆசிய புக் ஆஃப் ரெக்கார்ட்சில் இடம்பெற்ற மாரத்தான் ஒன்று, கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்ற மாரத்தான் ஒன்று என நான்கு மாரத்தான் நிகழ்வுகளின் தொகுப்பாய் இந்நூல் உருவாகி இருக்கிறது. அதுமட்டுமல்லாது கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தையும் இது உள்ளடக்கி இருக்கிறது.





கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம் வைக்கம் நகரில் இருந்து வேளாங்கண்ணி வரை தமிழக அரசு சார்பில் பேருந்துகள் இயக்கம். முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி கேரள மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் கே.பி.கணேஷ்குமார் முன்னிலையில் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தலைமையில் தமிழக அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடி அசைத்து துவங்கி வைத்தார்.

## கழக ஆட்சியில் தான்

# தமிழகத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் வரலாறுகள் வெளிப்படுகிறது!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!



சிவகங்கை, ஜன.5-

சிவகங்கை மை தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்தவர் வீரமங்கை ராணி வேலுநாச்சியார். இவரது 295 வது பிறந்தநாள் சிவகங்கை காளையார்கோவில் ரோட்டில் உள்ள சூரக்குளம் ராணி வேலுநாச்சியார நினைவு மண்டபத்தில் நடைபெற்றது. தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்திரவின் பேரில் கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வீரமங்கை ராணி வேலுநாச்சியார் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அருகில் உள்ள படைத்தளபதி குயிலியின் சிலைக்கும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமை தலைமை வகித்தார்.

மாவட்ட திட்ட இயக்குனர் திருமதி வானதி வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவின் டோங்கரே உமேஷ் ஆகியோர் பேசினார்கள்.

கோட்டாட்சியர் விஜயகுமார், தாசில்தார் சிவராமன், ஊராட்சிகள் உதவி இயக்குனர் கேசவ தாசன், மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

விழாவில் கலந்து கொண்டு ராணி வேலுநாச்சியாருக்கு புகழாரம் சூட்டி அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது :-

வீரமங்கை ராணி வேலுநாச்சியார் தமிழகத்திலிருந்து நாட்டின் விடுதலைக்காக இந்தியாவிலேயே முதன் முதலாக குரல் கொடுத்த வீரப் பெண்மணி ஆவார். வேலுநாச்சியார் வெள்ளையர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர். தமிழகத்தில் முதன் முதலாக சிவகங்கை சீமையிலிருந்து குரல் கொடுத்த அவர்தான் முதல் வீர பெண்மணி ஆவார் .ஜான்சி ராணி என்பவர் அவருக்கு பின் வந்தவர் ஆவார். தமிழகம் அதிகமான அளவில் சுதந்திரப் போராட்ட வீரர்களை கொண்ட மாநிலம் ஆகும். அதில் சிவகங்கை மாவட்டத்தில் அதிகமான அளவில் சுதந்திரப் போராட்டத்தில் வீரர்கள் ஈடுபட்டுள்ளார்கள் . வீரர்களின் இத்தகைய தியாகத்தினை பாராட்டி மதிக்கும் அரசு கழக அரசு ஆகும்.

தலைவர் கலைஞர் தலைமையில் சுதந்திர போராட்ட தியாகிகள், நாட்டிற்காக போராடியவர்கள் இத்தகைய வீர வரலாறு படைத்தவர்கள் போற்றி மதிக்கப்பட்டார்கள். தியாகிகளுக்கு பல்வேறு உதவிகளை முதல்வர் கலைஞர் செய்து வந்தார் .அதேபோல் தமிழக முதல்வர் தளபதி அவர்களும் தற்போது அவர்களை நினைவு கூர்ந்து அவர்களை கௌரவப்படுத்தி வருகிறார். இதே போல் ராணி வீரமங்கை வேலுநாச்சியாரின் படை தளபதி குயிலுக்கு ரூபாய் 50 லட்சத்தில் திருஉருவச்சிலையினை அமைத்துள்ளார். விரைவில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் சிலைகள் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. தமிழுக்காக பாடுபட்ட தியாகிகள் மற்றும் சுதந்திர போராட்ட வீரர்களையும் தியாகிகளையும் இந்த அரசாங்கம் தொடர்ந்து நினைவு கூர்ந்து மதித்து வருகின்றது .கழக அரசு அமையும் போதெல்லாம் சுதந்திரப் போராட்ட வீரர்கள் தமிழுக்காக போராடியவர்கள் மதிக்கப்படுகிறார்கள், பாராட்டப்படுகின்றார்கள். இவர்களது வரலாறுகளை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ளும் வகையில் அமையவேண்டும். அதற்கான கடமை நமக்கு உள்ளது.

இதை வைத்துதான் முதல்வர் அவர்கள் இத்தகைய சுதந்திரப் போராட்ட வீரர்கள் தமிழுக்காக உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூர்ந்து அவர்களுக்கு மணிமண்டபம் நினைவுச் சின்னங்கள் அமைத்து வருகிறார். இளைஞர்கள் இவர்களின் வீர வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும். ராணி வேலுநாச்சியார் களரி,குதிரை ஏற்றம், வாள் வீச்சு, மற்றும் போர் திறமையில் பயிற்சி பெற்றவர்ஆவார் .நாட்டை இழந்ததும் மீண்டும் போர் பயிற்சி பெற்று வந்து சிவகங்கையை மீட்டு ஆட்சி செய்த வீர பெண்மணி ஆவார். .சிந்து சமவெளி நாகரிகம் என்பது தமிழர்களின் நாகரிகத்திற்கு பிந்தையதாகும் .அதற்கு உதாரணம் கீழடியில் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் வாழ்ந்த அங்கு எடுக்கப்பட்ட பொருட்கள் சான்றாக கீழடி அமைந்துள்ளது .அது இன்று உலக அளவில் பெருமையாக பேசப்பட்டு வருகிறது. தமிழர்களின் நாகரிகத்தை வரலாற்றை சில சக்திகள் மறைக்க முயல்கிறார்கள். அவ்வாறு மறைப்பதை கழக ஆட்சி வெளிக் கொண்டு வருகிறது.கழக ஆட்சி இருக்கும் வரை இத்தகைய வரலாற்று உண்மைகளை மறைத்துவிட முடியாது. எத்தகைய சூழ்நிலையிலும் தமிழர்கள் செய்த தியாகத்தை மறைத்து விட முடியாது . இத்தகைய வீர வரலாறுகள் போற்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

சிவகங்கை மாவட்டத்தில் பாகனேரி அருகே உள்ள நகரம்பட்டியை சேர்ந்தவர் வாளுக்குவேலி அம்பலம். சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டதை போற்றி நினைவுகூறும் வகையில் ரூபாய் 50 லட்சத்தில் நகரம்பட்டியில் அவருக்கு நினைவு மண்டபம் சிலையுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. இதே போல் கம்யூனிஸ்டு மூத்த தலைவர் தோழர் ஜீவானந்தம் சிறாவயலில் ஆசிரியராக பணியாற்றிய பொழுது அவரை அண்ணல் காந்தியடிகள் சந்தித்தார். அந்த காந்தியடிகள் ஜீவா சந்தித்த இடத்தில் சிறாவயலில் ரூபாய் மூன்று கோடியில் பல்நோக்கு மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதே போல் அமராவதி புதூர் அருகில் மருது பாண்டியர் கள் ஆயுதப் பயிற்சிமேற்கொண்ட சத்திரபதிக்கோட்டை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணி ரூபாய் 10 கோடியில் நடைபெற்று வருகின்றது . இத்தகைய வரலாற்று பெருமைகளை நினைவு கூறுவது கழக அரசின் முக்கிய பணியாக முதல்வர் அவர்கள் செய்து வருகிறார்கள்.

இதற்காக நாம் பெருமைப்பட வேண்டும். நாடு பெருமைப்படும்போது மொழியும் முக்கியமாகும். அந்த மொழியும் பாதுகாக்கப்பட வேண்டும் .வரலாறு எவ்வளவு முக்கியமோ மொழியும் முக்கியமாக பாதுகாக்கப்பட்டால் தான் எதிர்கால சந்ததியினருக்கு நமது முன்னோர்கள் செய்த வரலாறு தெரிய வரும். ராணி வேலுநாச்சியார் வாரிசுதாரர்கள் பல்வேறு கோரிக்கைகளை மனுவாக கொடுத்துள்ளார்கள். அவர்கள் கோரிக்கைகளை முதல்வரிடம் தெரிவித்து படிப்படியாக நிறைவேற்ற என்னாலான முயற்சியை மேற்கொள்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பேசினார்.

விழா முடிவில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ராஜ செல்வன் நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப .மதியரசன், எஸ். .மாரியப்பன் கென்னடி, காரைக்குடி மாநகர செயலாளர் என்.குணசேகரன், நகர் கழக செயலாளர் கள் பெரி. பாலா, க.பொன்னுச்சாமி, மானாமதுரை ஒன்றியகுழு துணை தலைவர் முத்துச்சாமி, நகர் மன்ற துணைத் தலைவர்கள் பாலா சுந்தர், எம். கார் கண்ணன், வேலுநாச்சியார் அறக்கட்டளை தலைவர் கோபால் ,தேவஸ்தான சத்திர மேலாளர் பூசைத்துறை , ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், நாகனி ரவி ,சுப. சின்ன த்துரை, யோக.கிருஸ்ண குமார், ஆர்.எம்.கென்னடி , நா.நெடுஞ்செழியன், ஆறு. செல்வராசன், துரை. ராஜாமணி, எம்.அண்ணாத்துரை, வே.தமிழ் மாறன், பூமணி, கடம்ப சாமி, லெ.மு.ரவிச்சந்திரன்,

பேரூர் கழகச் செயலாளர் நாகூர் கனி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், நிர்வாகிகள் திலகவதி கண்ணன், மார்க்ரெட் கமலா, மஞ்சுளா, தமிழ்பிரியா, செல்வராணி அய்யப்பன், நிர்வாகிகள் இளைஞரணி அயூப்கான், சிவபுரி சேகர், அழகு சுந்தரம், அண்ணாமலை, ரவிச்சந்திரன், கார்த்தி, ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட அயலக அணி தலைவர் கேப்டன் சரவணன், சன் சீமான் சுப்பையா, வர்த்தக அணி ருக்மாசரவணன், கோதண்டபாணி, தகவல் தொழில்நுட்ப அணி காளிமுத்து, கண்ணன் பொதுக் குழு உறுப்பினர் ஏஆர்.ஜெயமூர்த்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

காங்கிரஸ். காங்கிரஸ் கட்சி சார்பில் எஸ். மாங்குடி எம்.எல்.ஏ தலைமையில் முன்னாள் மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம். ராஜரத்தினம் மகளிர் அணி வித்யா கணபதி, நகர் தலைவர் விஜய் தியாகராஜன் உட்பட நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர் பாலையா உட்பட நிர்வாகிகள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

## புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாநில அளவிலான மாபெரும் கபடிப் போட்டி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஜன.5-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி மாதவரம் அடுத்த வட பெரும்பாக்கத்தில் நடைபெறுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் 17 வது வட்டம் வட பெரும்பாக்கம் சமுதாய கூட வளாகத்தில் 5/1/2025 ஞாயிறு காலை 9 மணிக்கு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

17வது வட்டச் செயலாளர் கே கருணாகரன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

பகுதி கழக நிர்வாகிகள் வி.திராவிட வீரன், கே.சிவசங்கரன், ஆ.ராஜேந்திரன், எஸ்.கௌரி, ஆர்.முரளி, பி.தரணி, கே.காசிநாதன், பி.நிர்மல் குமார், கே.செல்வன், நா.மோகன் குமார் நாகூரார், வி.கார்த்திகேயன், பா.சந்திரன், கே .ராஜா ,

வட்டச் செயலாளர்கள் கே.அங்குசாமி, இ.கண்ணப்பன், மாத்தூர் கா.தாமரைச் செல்வன், பி .எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், நந்தினி சண்முகம், 17 வது வட்ட நிர்வாகிகள் சி.மூர்த்தி, சி. பாலாஜி, வி.பார்த்தசாரதி, ஏ.கோவிந்தராஜ், டி.ஸ்டாலின், லதா, கே.ராஜா, என். குமார், எஸ்.சுகேந்திரன், முன்னாள் கவுன்சிலர் என். கவிதா நாராயணன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம் எல் ஏ மருத்துவர் கலாநிதி வீராசாமி எம்.பி, கே.பி.சங்கர் எம்எல்ஏ, தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெஅருண், ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகிறார்கள்.

போட்டியில் முதல் பரிசாக ரூபாய் 25,000 மற்றும் 20000 மதிப்புள்ள சுழல் கோப்பை வழங்கப்படுகிறது.இரண்டாம் பரிசாக 15,000 ரொக்கம் மற்றும் பத்தாயிரம் மதிப்புரான சுழல் கோப்பை, மூன்றாம் பரிசாக ரூபாய் பத்தாயிரம் ரூபாய் ஐந்தாயிரம் மதிப்புள்ள சுழற் கோப்பை நான்காம் பரிசாக ரூபாய் பத்தாயிரம் மற்றும் ஐந்தாயிரம் மதிப்புள்ள தொழில் கோப்பை ஆகியவை வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் மிசா ப.மதிவாணன், வி.இராமநாதன், வி.கண்ணதாசன், வீ.கவி கணேசன், ஜி.சந்திர போஸ், ஆர்.பத்மநாபன், குறிஞ்சி எஸ் கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பா.அறிவழகி, எம்.ஆனந்தன், தி.மு.தனியரசு, ஜி.துக்காராம், ஏ .வி.ஆறுமுகம், எஸ்.நந்தகோபால், வை.ம. அருள்தாசன், மீ.வே .கருணாகரன்,ஜி.தயாளன், சி. அற்புதராஜ், ஜி.ராஜேந்திரன், ஜெ.ஜெய் மதன், இரா. முருகேசன், என்.பரந்தாமன், டி .ஏ.ராஜு, பி.சாந்தி, இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார்,வி. தியாகராஜன், சன் முனியாண்டி,எம்.எம்.செந்தில், எஸ்.ஏ.சீனிவாசன், கு.தமிழ் மணி, ரா.சுந்தர்ராஜ், ஜே.அபுல் ஹாசன், டாக்டர் து.கோபால், ஜே .தேவனேசன், எம்.கோமள வள்ளி, ஆர்.டி ,குமார், பி. வெங்கடேசன், கே.ரவிக்குமார், நா.மோகனசுந்தரம், ரா.உதயராஜ், கே.லட்சுமி காந்தன், மதிவாணன், சி. ஏழுமலை, சி.கோவிந்தராஜ், கே.தேசிங்கு, டி.சீனிவாசன், அம்மு மூர்த்தி,மு.சதீஷ்குமார், டி .ஜி.ஆர்.மணிவண்ணன், கேபிள் த.கணேசன், ஜி.கே.இனியன், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, பி .ஜெயராஜ், டி.வினோத், ஜி.ராஜ்குமார், எஸ்.உதயகுமார், கே.சண்முகப்ரியன், எஸ். கோபாலகிருஷ்ணன், எஸ். சிவக்குமார், பா.கோபிநாத், ஹெச்.பீர் முகமது, பி. குணசேகரன்,வீ.மணிகண்டன், துரை தசரதன், சா.முகமது வசீம், கே.ஏழுமலை, எஸ்.கருணாகரன், க.சரவணன், டி.ஜெய்சங்கர் ,என். சந்திரன், டி.வெங்கடேசன், பேன்சி ரமேஷ், கா.சேரலாதன், எஸ்.பார்த்தசாரதி, எம் அமுதா, கலைச்செல்வி,ஆர். சுதா, எஸ்.சுதா, ஜெ.யுவராணி, எஸ்.ஆர்.சேகராஜன், சி.ஹரிஷ், சுப்பிரமணி, ஏ.விஜயன், யுவராஜ், த.விக்னேஸ்வரன்,

17 வது வட்ட பாக முகவர்கள் என்.நாகராஜன், டி.திவாகர், வி.சுமீர், ஜி. கார்த்திக், நைனியப்பன், வக்கீல் சுரேந்தர், வக்கீல் எம்.என்.தளபதி, மணலி புதுநகர் சி எம்.ராஜா, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், குளக்கரை மஞ்சுநாதன், கடப்பாக்கம் மகேஷ் குமார், சாம்ராஜ்.விஜய் ஆனந்த், தினேஷ் சங்கர், மாத்தூர் விஜயகுமார், முகமது முஸ்தபா, ராஜேஷ் கண்ணன்,புழல் வி.ஆர். கே.ஜவகர், பழைய நாபாளையம் தசரதன், அரியலூர் எஸ்.நாகராஜ் வடபெரும்பாக்கம் ஜி.முனிவேல், ஜி. செல்வம், எஸ்.கமலநாதன், பி.செந்தில், எம்.கோவிந்தன், இ.கார்த்திக் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள். நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பை வட பெரும்பாக்கம் டாக்டர் எம்.மைக்கேல் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆர்மச்சூர் கபடி கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் கோலடி கே.கே .எஸ்.சாரதி ஆகியோர் செய்து வருகிறார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என். அஜய் தென்னவன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் செய்து வருகிறார்.



கடலூர் தேவனாம்பட்டினம் பெரியார் அரசு கலைக்கல்லூரியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.60 லட்சம் மதிப்பில் உணவக கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். மாநகராட்சி ஆணையாளர் அனு, துணை மேயர் தாமரைச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கடலூர் சட்டமன்ற உறுப்பினர் அய்யப்பன் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி புதிய உணவகம் கட்டும் பணியை தொடங்கி வைத்தார். இதில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பிரமிளா, உதவி செயற்பொறியாளர் சிவசங்கர நாயகி, பேராசிரியர்கள் சாந்தி ராமகிருஷ்ணன், நிர்மல் குமார், இளவரசன், சீனிவாசன், மனோகரன், கவுன்சிலர் மகேஸ்வரி விஜயகுமார், கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், உதவி பொறியாளர்கள் சுரேஷ், வினோத்குமார் மற்றும் கலையரசன், சுகுமார், தேவராஜ், தென்னரசு, வீரமணி, வடிவேல், தொ.மு.ச. ஸ்ரீதர், சக்திவேல், இளங்கோ, மதிவாணன், செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.